# ஆனையிறவு முகாம் கிழக்குப் பகுதியில் புலிகள் - இராணுவம் உக்கிர மோதல்

(ஆனையிறவு)

ஆனையிறவு முகாம் கிழக்குப் பகுதியில் இருந்து சில நூறு யார் தூரத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் தொடர்ந்தும் கடும் மோதல் இடம்பெற்றுவருகின்றது.

நேற்றுக்காலை 8·30 மணிக்கு ஆரம்பித்த இம் மோதல் செய்தி அச்சுக்குப்போகும்வரை தொடர்ந்தும் நடைபெறுகின்றது. மிகவும் உக்கிரமாக நடைபெறும் இச்சண்டையில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகள் தரப்பிலும் சிலர் வீரமரணமடைந்தனர்.

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 19 (04 - 08 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 167

## விடுதலைக்காக பிள்ளைகளை களம் அனுப்பிய பெற்றோர்

(கிளிநொச்சி)

தமிழீழ மண்மீட்பிற்காக விடுதலைப்புலிகளுடன் இணைந்து போரிட தாமே முன்வந்து இரு பெற்றோர்கள் தமது பிள்ளைகளை மாவட்டச் செயலகத்தில் ஒப்படைத்தனர். கிளிநொச்சி 154 ஆம் கட்டையைச் சேர்ந்த இராமச்சந்திரன் தனது மகன் தியாகராஜா (வயது 18) என்பவரையும் கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த யோகராஜா தனது மகள் பிரபா (வயது 16) என்பவரையும் விடுதலைப்புலிகள் ( 4 ஆம் பக்கம் பார்க்க )

# ஆனையிறவில் படு காயமுற்றிருந்த 53 படையினர் நேற்று மாலை மீட்பு

## வோல்டர் பெர்னான்டோ அறிவிப்பு

(கொழும்பு)

ஆனையிறவு முகாமினுள் காயமுற்றிருந்த ஐம்பத்திமூன்று இராணுவத்தினரையும் ஒப்பரேசன் பலவேகய துருப்பினர் மருத்துவ சிகிச்சைக்காக நேற்று மாலை 6.40 மணிக்கு வெளியே கொண்டு வந்துள்ளதாக சிறிலங்காப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் வோல்டர் பெர்னான்டோ நேற்றிரவு தெரிவித்தார்.

ஆனையிறவு முகாமின் வெளிச்சுற்றுப் பகுதியில் இடம்பெற்ற கடும் மோதலின் பின்னர் படையினர் வெளியே கொண்டுவரப்பட்டதாகவும், முகாம் பகுதியில் தொடர்ந்தும் கடுமமோதல் இடம்பெற்று வருவதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

## தமிழர் துன்பம் குறித்து சுவீடன் பிரதமர் கவலை

(வல்வெட்டித்துறை)

தமிழ் மக்களும், அனைத்துப் பிரசைகளும் அனுபவித்து வரும் துன்பங்கள் மேலும் அதிகரித்து வருவது குறித்து நான் மிகவும் கரிசனையும், கவலையும் கொண்டுள்ளேன் இவ்வாறு சுவீடன் நாட்டுப் பிரதமர் சார்ல்சன் கே.சி. ஆடியபாதனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கே.சி. ஆடியபாதனும், வல்வெட்டித்துறைப் பிரசைகளும் சுவீடன் பிரதமருக்கு அனுப்பிய மகஜருக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

இனப் பிரச்சினை பற்றிச் சிறிலங்கா அரசின் பிரதிநிதிகளுடன் சுவீடன் அரசு விவாதித்ததாகவும், இது குறித்துத் தமது கவலையைத் தெரிவித்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## 25 படை பலி; 3 வாகனம் தீக்கிரை இராணுவம் முகாம் நோக்கி ஓட்டம்

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட இருபத்திஐந்திற்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். மிகுதியானோர் முகாமிற்கு ஓடிவிட்டனர். மூன்று இராணுவ வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. பல நவீன ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

புலிகளின் தரப்பில் ஒரு போராளி வீரமரணமடைந்தார்.

பொலநறுவை மாவட்டம் கள்ளிச்சை முகாமில் இருந்து வெலிக்கந்தை முகாம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினரும் அவர்களுக்கு உதவியாக வெலிக்கந்தை முகாமில் இருந்து வெளியேறி வந்த இராணுவத்தினருமே தாக்குதலுக்கு இலக்காகியவர்கள் ஆவர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் மாலை கள்ளிச்சை இராணுவ முகாமில் இருந்து ஒரு உழவு இயந்திரத்திலும் கால்நடையாகவும் வெலிக்கந்தை நோக்கிவந்த இராணுவத்தினர்மீது புலிகள் அதிர (4 ஆம் பக்கம் பார்க்க)

## அரிசித் தேவையில் 2·5 வீதமே வந்தது

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்துவந்து குடியிருப்பவர்கள் உட்பட மொத்தம் 2,32,787 குடும்பங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கின்றனர். இக்குடும்பங்களின் உணவுத் தேவை வருடமொன்றுக்கு 7,92,000 மெற்றிக் தொன் அரிசியென யாழ். செயலக அதிகாரிகள் சேகரித்த தரவுகள் தெரிவிக்கின்றன.

ஒரு வருடத்திற்குச் சற்று அதிகமான காலப்பகுதியான 11-06-90 — 21-06-91 வரை 20,256 மெற்றிக் தொன் அரிசி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (4 ஆம் பக்கம் பார்க்க)

## கள்ளிச்சையில் புலிகளால் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

கள்ளிச்சை இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரங்கள் வருமாறு;

- ஏ. கே எல். எம். ஜி. ரக துப்பாக்கிகள் 02
  அதற்குரிய மகசீன் 09
- ரி. 56-2 ரக துப்பாக்கிகள் 09
  அதற்குரிய மகசீன் 42

(4ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே பொருள் செல்ல உதவுவது தேசத்துரோகம் - பிரேமதாசா

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருள்களை வடபகுதிக்கு அனுப்பி வைப்பதாகக் கூறிக்கொண்டு நாட்டுக்குத்துரோகம் இழைத்தவர்களின்பெயர்ப்பட்டியலை வெளியிடப் போவதாக ஜனாதிபதி திரு.ஆர். பிரேமதாசா அறிவித்துள்ளார்.

உணவு மற்றும் "அத்தியாவசியப் பொருள்கள்" என்ற (4 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் விமானக் குண்டு வீச்சு; ஆலயமும் வீடும் சேதம்

சிறிலங்கா குண்டுவீச்சு விமானம் ஒன்று நேற்று அதிகாலை சாவகச்சேரி நகர்ப் பகுதியில் வீசிய குண்டினால் ஆலயமும் வீடொன்றும் சேதமடைந்துள்ளன.

காலை 6 மணியளவில் வை-12 விமானம் வீசிய இக் குண்டினால்செருக்கல்பிள்ளையார் ஆலயமும் அருகில் இருந்த வீடொன்றும் சேதமடைந்தன. ஆயினும் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (86)

## வீரமரணம் 2ஆம் லெப். ஜெயந்தன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கள்ளிச்சை சிறிலங்கா இராணுவ முகாமில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்மீது தாக்குதல்

## சிறிலங்காவுடன் பேசுமாறு கோரப் போகிறேன் - சரத் பவார்

(டில்லி)

இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்களைத் துன்புறுத்துவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றி சிறிலங்கா அரசுடன் பேசுமாறு வெளியுறவுத்துறையினரைக் கேட்க்ப்போவதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் கூறியுள்ளார்.

தொண்டிமுதல் ராமேஸ்வரம் வரையிலான கடற்பகுதியை விமானம் மூலம் சுற்றிப் பார் (4ஆம் பக்கம் பார்க்க)

## நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தலைவர் திரு. வி. எம். கணபதிப் பிள்ளை அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு, பிரச் சினைகளுக்கும் துயரங்களுக்கும் மத்தியிலும் தவறாது சமுகமளித்து, எங்கள் துயரத்தில் பங்குகொண்டு. சகல விதத்திலும் உதவிகளை வழங்கி, அன்னாரது இறுதிக் கிரியைகளிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும், குறிப்பாகச் சரசாலை வாழ் மக்களுக்கும், போக்குவரத்துச் சிர மத்தின் மத்தியிலும் தூர இடங்களிலிருந்து வருகை தந்தவர்களுக்கும், இந்த இக்கட்டான காலகட்டத்தில் எமக்கு உரிய நேரத்தில் உதவிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும், தமது கடைகளைப் பூட்டி அஞ்சலி செலுத்திய சாவகச்சேரி வர்த்தகர்களுக்கும், உரிய காலத்தில் மரணச் செய்தியைப் பிரசுரித்த தமிழீழத்தில் இயங்கும் சகல பத்திரிகை நிறுவனத்தினருக்கும், வானொலிக்கு மரணச் செய்தியை அறிவித்த கொழும்பு நண்பர்களுக்கும். அந்தியகால சேவை நிலையமான வைற் ஹவுசினருக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சரசாலை வடக்கு, V. M. K. குடும்பத்தினர்
சாவகச்சேரி.
(R/1610)

## வீர வணக்கம்



### லெப். கேணல் சரா
**(சின்னத்துரை ஜீவராசா - கல்வியங்காடு)**

வீரஜனனம்: 19 - 4 - 1962 வீரமரணம்: 27 - 7 - 1991

ஈழத் தமிழர்களே ஒன்று சேர்
இனி உறக்கம் தேவையில்லை வந்து சேர்
இடி இடித்து மழை பொழிந்தால் பூமி செழிக்கும்
உன் இதயத்திலே துணிவிருந்தால் ஈழம் பிறக்கும்
ஈழத்துக்காய் கரும் புலியும் தன்னை மறந்தான் - தமிழ்
ஈழத்துக்காய் திலீபன் அவன் உண்ண மறந்தான்!
உண்மையிலே உன்னிடத்தில் வீரமில்லையா?
அது உணர்வின்றி இருந்து விட்டால் ஊனமல்லவா
மெழுகு திரி எரிகிறதே காணவில்லையா - அது
தனக்காக எரியவில்லை பார்க்கவில்லையா?
தனக்காக வாழ்வதுதான் தன்னலவாதி
தன் இனத்துக்காக வாழ்வதுதான் தமிழ் இன நியதி
மௌனமாக இருக்கிறாயே மானமில்லையா?
மரணித்தவன் பெயரை நீயும் காணவில்லையா?
கல்வியங்காடு ஈன்ற செல்வனல்லவா - அவன்
சரா என்னும் பெயருடைய வீரனல்லவா?
''சரா''வினின் வாழ்க்கையிலே காதல் இல்லையா?
அவன் கலங்காமல் மோதினானே காணவில்லையா-அவன்
கண்ணெதிரே நிற்பதந்த ஈழம் அல்லவா?
அதைக் கலங்காமல் மீட்பதற்கே புறப்பட்டவன்.
சரா என்ன சரித்திரத்தில் மாண்டு விட்டானா- இல்லை
சாதனையில் வீரன் அவன் சாவது இல்லை
விடுதலையில் வேள்வியிலே யாகம் வளர்த்தோம் - அந்த
யாகத்துக்கே சரா அவனைத் தானம் கொடுத்தோம்.
காந்தியத்தைக் காட்டியவன் இந்தியன் ஆவான்
அந்தக் காந்தீயத்தை வென்றவனோ ஈழத்திலாவான்
கட்டைக்காட்டுக் கயவர்களின் கொட்டமடக்கிக்
கெட்டியாக இடம்பிடிக்கான் எட்டுத் திசையும்
கட்டைக்காட்டுப் பகுதியிலே பெரும் சேனை - அதை
எதிர்கொண்டு வீழ்த்திடுவார் நம் வீரர்
சட்டைக்காட்டுக் கயவர்களை எட்டி உதைக்க
வீறு கொண்டு எழுந்திடுவீர் எம்மினமே
கட்டுவனில் களம் புகுந்தான் செல்வராஜா - அந்த
ராஜாக்கள் வரிசையில் ஓர் ஜீவராசா
பத்துமாதம் சுமந்தெடுத்தாள் பரமேஸ்வரி - உன்னைப்
பாதியிலே பிரிந்து விட்டோம் ஜீவராசா.

**- அன்பு பயிற்சி பாசறை சக போராளிகள்**

(R-1604)

## மங்களகரமான திறப்பு விழா

தேன் மதுரத் தமிழோசை
உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.
தேன் மதுரச் சுவை நாடி
தீவகத்தில் சுவையகத்திற்கு வருகை தாருங்கள்

தாயகத்தில் ஒரு தீவகம்
தீஞ்சுவைகளுக்கு ஒரு சுவையகம்



# சுவையகம்



05-08-1991 திங்கட்கிழமை
ந ப 12-00 மணியளவில்
மங்களகரமான திறப்பு விழா

தமிழீழ மககளே வருக! வருக!
தேன் மதுரச் சுவை நாடி வருக! வருக!
என வரவேற்கின்றோம.

**'சுவையகம்'**
யாழ். பிரதான சாலை,
மண்கும்பான்,
தீவகம்.

(R-1608)

**விளம்பரம்**

### மலிவு விற்பனை

A/L, O/L, ஆண்டு 5 புலமைப்பரிசில்) பரீட்சைகளுக்கான Tutes மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond புத்தக நிலையம் 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(B/2891)

### அனித்தா பயிற்சி நிலையம் மனையியல் கண்காட்சி

இம்மாதம் 9,10,11 ஆம் திகதிகளில் நடைபெறும். Cake Icing, Cookery, Hair Style, Handy Craft, Needle Work. (B/2900)

### விற்பனை

நவீன எலக்ரோனிக் அக்காய் ஓடியோ டெக், எக்கோ ஈகுவலைசர், C,D, பிளேயர், எலெக்ரோனிக் டப்பிங்டெக், நெஷனல் வீடியோ டெக், நெஷனல் S–I வீடியோ மிக்சர் முதலியன விற்பனைக்கு உண்டு, கிழமை நாட்களில் தொடர்பு கொள்ளவும். விக்ரேஸ். இல. 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(R/1606)

### தவறிவிட்டது

28 07-91 இரவு நல்லூர்க் கோயிலுக்கும் கைலாசபிள்ளையார்கோயிலுக்கும் இடையில் 1990 ஆம் ஆண்டுக்குரிய கறுப்பு நிற நாள் குறிப்பேடு (டயறி) ஒன்று முக்கிய ஆவணங்களோடு தவறிவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (R/1603)

### கல்வி

(G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு 40 மணித்தியாலத்தில் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி சுண்டுக்குளி.

(R/1607)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 08 - 04

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் தவறுதலாக நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டினால் எமைப்பிரிந்த
**அமுதன்** (அரியமுத்து அமுதலிங்கம் - ஈவினை, புன்னாலைக்கட்டுவன்)

1987 ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினரால் கொலை செய்யப்பட்ட
* **தேவா** (மங்களநாயகம் - முல்லைத்தீவு)
* **குகன்** (செந்தில்குகன் - கைதடி)

திருக்கோணமலை சாம்பல்தீவைச் சுற்றி வளைத்த கறுப்புச்சட்டைக்காரர்களால் படுகொலை செய்யப்பட்ட ஒரு குழந்தை உட்பட 4 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு பரந்தனில் தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட இருவர்

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு ஊற்றுமடுவில் இந்தியப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய
**2ஆம் லெப். தம்பிராசா** (த. கிருஷ்ணகுமார் - மட்டக்களப்பு)
**சுரேன்** (கந்தவேல் ரகுநாதன் - மட்டக்களப்பு)

முல்லைத்தீவு, கள்ளிக்காட்டுப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
**சுரேஷ்** (ந. சிவராசா – திருக்கோணமலை)

துன்னாலையில் இந்தியப் படையினருடனான மோதலில் காயமுற்று, மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் தேசவிரோதிகளின் துப்பாக்கிச் சூட்டினால் வீரமரணமெய்திய
**சங்கர்** (குணம் குணபாலன் – கரவெட்டி)

கீரிமலையில் இந்தியப் படையினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட எமது தீவிர ஆதரவாளர்.

கரவெட்டியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1990ஆம் ஆண்டு வவுனியா, மாமடு முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்காப் படையினருடன் விளாத்திக் குளத்தில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமெய்திய
**ஜெசி** (வவுனியா)
**விபுலானந்தன்** (வவுனியா)
**றோகான்/குகன்** (வீரகத்திப்பிள்ளை குகதாசன் - கேணிக்குளம் ஒழுங்கை, இருபாலை கிழக்கு, கோப்பாய்)

திருக்கோணமலை, உப்பாறு பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட இளம் பெண்

யாழ். மத்தியூஸ் வீதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

* மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/ 2895)

## சிந்தனைக்கு

முயற்சி செய்தாலொழிய தன்னுடைய திறமை தனக்கே தெரியாது.

— புப் லியன் ஸைரஸ்

ஈழநாதம்

31, மகேந் ரோவீதி, யாழ்ப்பாணம், 0 -08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 02 -2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05

# இராணுவத்தின் ஜீவமரணப்போராட்டம்

ஆனையிறவுமோதலில் எத்தரப்பு வெற்றி பெற்றாலும் போர் இத்துடன் ஓய்ந்துவிடப் பேரவதில்லை. அடுத்த கட்டத் தாக்குதலின் தொடக்கம் இதுவாகவே இருக்கும். ஆனால் சிறிலங்காவின் இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா குறிப்பிட்டது போன்று இது ஓர் இறுதிப் பேராக இருக்கப் போவதில்லை என்று மட்டும் துணிந்து கூறலாம். அதேவேளை போர் ஓயவேண்டுமானால், தமிழரின் விடுதலைப் போராட்டம் வெற்றிபெற வேண்டும்.

ஆனையிறவுப் பெரும் போரைப்பற்றி பேசும் சில இராஜதந்திரிகளும், செய்தியாளர்களும் இதில் விடுதலைப் புலிகள் வெற்றியடையத் தவறினால் சிறிலங்கா அரசாங்கம் இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்து கொண்டு பேச்சுவார்த்தைக்குத் தயாராகலாம் என கருத்துக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்த இராஜதந்திரிகளினதும், செய்தியாளர்களினதும் கருத்து ஏற்புடையதொன்றல்ல. ஆனையிறவு இராணுவ முகாமை தக்க வைத்துக்கொள்ளுவதால் சிறிலங்கா இராணுவம் மேலாதிக்க நிலையை அடைகிறதென்பது தவறான கணிப்பீடாகவே முடியும். மாறாக தமிழர் பிரதேசத்தில் தொடர்ந்து நீடிப்பதற்கு சிறிலங்கா இராணுவம் எவ்வளவு சிரமங்களையும், உயிர் இழப்புக்களையும், பொருள் இழப்புக்களையும் சந்திக்கவேண்டி வரும் என்பதை இப்போர் உணர்த்தியுள்ளது.

விடுதலைப் புலிகள் தமக்கு நன்கு பரிச்சயமான பகுதியில் இருந்து போராடுகின்றார்கள். இதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது எனக் குறிப்பிட்டார் சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா. இதிலிருந்தே அந்நிய மண் ஒன்றில் சிறிலங்கா இராணுவம் உள்ளது என்பதையும், மண்ணின் வேறுபாடு அவர்களுக்கு பெரும் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

இந்நிலையில், ஆனையிறவு மோதல் அந்நிய மண்ணில் போரிடுவது என்பது எவ்வளவு சிரமமானது என்பதை தற்பொழுது உணர்த்தியிருக்கும். இதை விடுத்து இராணுவம் மேலாதிக்கம் பெற்று விடும் எனக் கூறுவது பொருத்தமற்றதாகும்.

மேலும், ஆனையிறவு மோதலில் சிறிலங்கா இராணுவம் நடத்தியது ஜீவமரணப் போராட்டமே ஒழிய மேலாதிக்கத்திற்கான போராட்டம் அல்ல. ஆனையிறவு முகாமிற்குள் ஐந்நூறு பேராக இருந்த இராணுவத்தினரின் எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரித்தும், தளபாட வசதிகளை அபரிமிதமாகப் பெருக்கியும் ஆனையிறவு முகாம் வீழ்ந்து விடுமோ என்ற அச்சத்தினால் சிறிலங்கா இராணுவம் நடத்திய ஜீவமரணப் போராட்டம் இது. இம் முகாமைப் பாதுகாப்பதற்கென சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட இப் போரே அதன் இராணுவ வரலாற்றில் பெரும்போராகவர்ணிக்கப்படுகின்றது. இந்நிலையில் உயிருக்காகப் போராடியவனை மேலாதிக்கத்திற்காகப் போராடியவன் என எவ்வாறு குறிப்பிட முடியும்?

ஆனால் ஆனையிறவுப் போரில் தமது முன்னேற்றத்தை வலியுறுத்தப் போரிட்டவர்கள் விடுதலைப்புலிகள். முகாமின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்த வேளையிலும் புலிகளால் முகாம் முற்றுகையிடப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டது. முதலாவதாக மரபுவழிப்படை அணியாகப் புலிகள் போரிட்டார்கள். இதனால் இப்போரில் வெற்றி பெறாவிட்டாலும் - இப்போரில் வெற்றி தோல்வியை உடன் கணிப்பிடமுடியாது. இதற்குச் சிலமாதங்கள் செல்லலாம். ஆனால் சிறிலங்கா இராணுவம் மேலாதிக்கம் பெற்று விட்டது எனத் திட்டவட்டமாகக் கூறிவிடமுடியாது.

இந்தவகையில் ஆனையிறவு மோதலைப் பற்றி குறிப்பிட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரட்ணம் யோகி ஆனையிறவுச் சண்டையில் நாம்-புலிகள் - வெற்றிபெற்றால் மிகக் குறுகிய காலத்தில் எமது போராட்டத்தின் குறிக்கோளை நாம் அடைவோம். இச் சண்டையில் வெற்றி பெறாவிட்டால் அடுத்தகட்ட வளர்ச்சிப் பாதையில் எமது போராட்டம் தொடர்ந்து செல்லும் எனத் தெரிவித்தார். இதுவே இம்மோதல்பற்றிய சரியான கணிப்பீடாகும்.

# சாதனைகள் பல புரிந்த தளபதி மேஜர் கணேஷ்

வெற்றிலைக் கேணியிலும், கட்டைக்காட்டிலும் தரையிறங்கிய சிறிலங்காப்படையினருடனான சமரில் கடந்த வியாழக்கிழமை வீரமரணமெய்திய மேஜர் கணேஷ் (வைத்திலிங்கம். துரைவடிவேல்) தொண்டமனாற்றைச் சேர்ந்தவர்.

1985 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் தன்னை இணைத்துக் கொண்ட இவர் ஆடிய களங்களும், வெற்றிகளும் பலப் பல. முன்னாள் படைத்தளபதி மேஜர் ரஞ்சனின் மறைவுக்குப் பின் வடமராட்சித் தாக்குதல் படைப்பிரிவின் தளபதியாக பொறுப்பேற்றவர்.

★ 1987 ஆம் ஆண்டு ''ஒப்பரேஷன் லிபரேஷன்'' காலத்தில் நிகழ்ந்த நெல்லியடி இராணுவமுகாம் மீதான கரும்புலித் தாக்குதலின் போது அவ்விடத்திற்கு வல்லைசந்தியூடாகவரமுற்பட்ட படையினருடன் நேரடிச்சமர் புரிந்துஇராணுவத்துக்குபாரிய இழப்பை ஏற்படுத்தியவர். அத்தாக்குதலில் கழுத்தில் விழுப்புண்பட்டு மயிரிழையில் உயிர் தப்பிய மாவீரர். இதற்காக அவர் இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்றார்.

★ யாழ். கோட்டையில் நடைபெற்ற பாரிய தாக்குதலுக்கும் வடமராட்சியிலிருந்து ஓர் படையணியை தலைமை தாங்கிக்கொண்டு சென்றவர்.

★ மன்னார் பரப்புக் கடந்தான் ஊடாக மடுநோக்கி செல்ல முயன்ற இராணுவத்தை அடித்து துரத்தியது.

★ ஆனையிறவு முகாமை தகர்த்தெறிய அதன் அமைப்பை உளவு பார்த்து வந்து உரிய ஏற்பாடுகளைச் செய்தார்.



★ ஆனையிறவு சுற்றுலா விடுதிகைப்பற்றுவதில்துணைத் தளபதியாக படை நகர்த்திச் சென்றவர். விழுப்புண்பட்ட வேளையிலும்விடாது முயன்று அத்தாக்குதலில் வெற்றியீட்டியவர்.

இறுதியில் கடந்த வியாழக்கிழமை இராணுவத்தினருக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்திய அத்தாக்குதலில் இவர் வீரமரணமடைந்தார்.

## உலர் உணவு அட்டைகள் மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவைச்சேர்ந்த தற்போது அகதி முகாங்களில் வசிப்பவர்கள் தவிர்ந்த ஏனையோரின் குடும்ப உலர் உணவு அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளது. இதன் காரணமாக பிரதான குடியிருப்பாளர் தத்தமது குடும்ப உலர் உணவு அட்டை, தேசிய அடையாள அட்டை சகிதம் எதிர் வரும் திங்கள் முதல் வெள்ளி வரை யாழ். புனித மரியாள் பாடசாலையில் (ஒ.எல் ஆர்) மீள் பரிசிலனை செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். மீள் பரிசிலனை செய்த அட்டைக்கே பதினாறாம் கட்ட நிவாரணம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

## நோயாளி ஓட்டம்

யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் இரவோடு இரவாகஓடிவிட்டார். இவரை உறவினர்கள் தேடி வருகின்றனர்.

இவர் கடந்த மாதம் இருபத்தி மூன்றாம் திகதி நடந்த ஒரு விபத்தில் தலையில் நரம்புப் பாதிப்பிற்குள்ளான நிலையில் மந்திகை வைத்தியசாலையிலிருந்து யாழ். வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

செ. சூரியமூர்த்தி என்ற 47 வயதுடைய இவர், கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார். இவருக்கு முன் பக்கத் தலை நரைத்திருக்கும். இவர் இறுதியாக நீல நிறச் சாரம் அணிந்திருந்தார் என இவரது உறவினர்கள் கூறி உள்ளனர்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிராமிய உற்பத்திக் குழுக்களின் தலைவர், செயலாளர் ஆகியோர் கலந்துகொள்ளும் மாதாந்தக் கலந்துரையாடல் நாளை பிற்பகல் இரண்டு மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

# கர்நாடக அரசு மீது உயர் நீதிமன்றம் கண்டனம்

(டில்லி)

காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பை ஆட்சேபித்து கர்நாடக அரசு தகுந்த ஆவணங்களை இணைக்காமலும், முறையான முறையில் இல்லாமலும் வழக்குப் பதிவு செய்து கொண்டதற்காக கர்நாடக அரசை உச்ச நீதிமன்று நேற்று முன்தினம் கண்டனம் செய்தது.

தமிழ் நாட்டுக்கு205ரி. மெ. சி. தண்ணீர் விடுமாறு காவிரி நடுவர் மன்றம் அளித்த இடைக்கால உத்தரவை எதிர்த்துக் கர்நாடக அரசு அந்த வழக்கைப் பதிவு செய்தது.

வழக்குப் பதிவு செய்திருப்பதாக வெறும் பிரசாரமும், விளம்பரமும் செய்வதற்காக தகுந்தஆவணங்களைஇணைக்காமல் அவசரமாக வழக்குப் பதிவு செய்துவிட்டுப் பின்னர் உச்ச நீதிமன்றம் இந்த வழக்கைக் காலதாமதம் செய்ததாகப் பிரசாரம் செய்யப்படலாம் என்று கே. என். சிங் குறிப்பிட்டார்.

இம்மாதம் 6 ஆம் திகதி அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், கர்நாடக அரசு தகுந்த ஆவணங்களை இணைக்க வேண்டும் என்றும் நீதிமன்று பணித்துள்ளது.

# மாணவர் தியாகத்தை தேசம் வேண்டி நிற்கின்றது

- அரவிந்தன்

எமது முகாம்களில் ஏந்துவாரற்று தேங்கிக் கிடக்கும், ஆயுதங்களை ஏந்திப் போராட தமிழீழ தேசம் தேசப்பற்றுள்ள மாணவர்களின் தியாகத்தை வேண்டி நிற்கின்றது என்று விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு அரவிந்தன் கூறினார்.

கொக்குவில் ஞான பண்டித வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்; ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதல் இதுவரை காலமும் நடைபெற்ற முகாம் அழிப்புகளை விட பாரியது. இந்தப் போரில் எதிரி ஆயுத, ஆட்பலத்தின் மூலம் எம்முடன் போர் புரிந்து கொண்டிருக்கின்றான். நாம் எமது மன உறுதியின் மூலமே அவனுக்கும் பதிலடி கொடுத்து வருகின்றோம் எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் வீட்டுக்கொருவர் நாட்டைக் காக்க போராட வருவதற்கே தயங்குகின்ற நிலை இருக்கையில் பல குடும்பங்கள் முற்று முழுதாக தம்மை அர்ப்பணித்துப் போராடுகின்றன. மட்டக்களப்பைக் சேர்ந்த பெண் போராளி நிருபா ஆனையிறவு மோதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட போது போராளியான அவரது இன்னுமொரு சகோதரியே அவரது சிதைக்கு தீ மூட்டுகின்றார்.

இப்படி குடும்பம் குடும்பமாக தமிழீழ மக்கள் போராட்டத்தில் இணைகின்றனர். இன்று தமிழீழ தேசம் தேசப்பற்றுள்ள மாணவர்களினதும், மக்களினதும் தியாகத்தை வேண்டி நிற்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

# சமாதான மாநாட்டில் இஸ்ரேல் பங்குபற்றும்

(டெல்அவில்)

பாலஸ்தீனியர்கள் சார்பில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் யார் என்பது பற்றிய பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால் அமெரிக்கா ஏற்பாடு செய்யும் சமாதான மாநாட்டில் பங்கு கொள்ளத் தயாராக இருப்பதாக இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ஷாமிர் அறிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு விஜயம் செய்திருக்கும் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் இஸ்ரேலியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

செய்தியாளரிடம் பேசிய இஸ்ரேலியப் பிரதமர்மேலும், அயல் நாடுகளுடன் சமாதானமாக வாழ இஸ்ரேல் விரும்புவதாகவும், பலஸ்தீனியப் பிரதிநிதிகள் பற்றிய பிரச்சினை தீர்க்கப்பட்டால் அமெரிக்கா தெரிவித்த யோசனைகளுக்கு சமாதான மாநாட்டில் கலந்து கொள்ள இஸ்ரேல் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார். இதனைத்தமது அமைச்சரவைக்கு சிபாரிசு செய்யப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

# வளைகுடா யுத்தத்தினால் சமாதான வாய்ப்பு

## - ஜோர்ஜ்புஷ்

(வாஷிங்டன்)

வளைகுடா யுத்தம் மத்திய கிழக்கிலும், சைப்பிரசிலும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. சம்பந்தப்பட்ட நாடுகள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார். குவைத் மீது ஈராக் முற்றுகையிட்டு ஒரு ஆண்டு பூர்த்தியானதை யொட்டி ஆற்றிய உரை யொன்றிலேயே அமெரிக்க அதிபர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜோர்தான் தலைநகரான அம்மான் சென்றுள்ள அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜேம்ஸ்பேக்கர், மத்திய கிழக்கு சமாதான மாநாட்டிற்கு வளைகுடா நாடுகளின் ஆதரவைப் பெறுவதில் தீவிமாக இந்நது வருகிறார்

# பாலஸ்தீன விடுதலையையே தீர்வாக ஏற்க முடியும்

(தெகிரான்

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிலிருந்து பாலஸ்தீனம் விடுதலை பெறுவது ஒன்றே மத்திய கிழக்குப்பிரச்சினைக்கு தீர்வாக தான் ஏற்கக்கூடு மெனஈரான் அறிவித்துள்ளது. ஈரானிய வெளியுறவு அமைச்சர் அலிஅக்பர் வெலயாத்தி தெகிரான் வானொலியில் பேசும் போது இதனைத் தெரிவித்தார் அவர் மேலும் பாலஸ்தீனியர்களின் தாயகம் பற்றிய பிரச்சினையில் எந்த விட்டுக்கொடுப்பிற்கும் ஈரான் இணங்காது எனத் தெரிவித்தார்.

# பெங்களூரில் இருவர் சயனைட் அருந்தினர்

தென்னிந்திய நகரங்களில் ஒன்றான பெங்களூரில் குற்றப் புலனாய்வு அதிகாரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இருவர் சயனைட் அருந்தியதாகக் கூறப்படுகின்றது. இவர்களில் ஒருவர் இறந்துவிட்டதாகவும் மற்றவர் வைத்திய சாலையில் ஆபத்தான நிலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டபோது அவரும் மரணமடைந்து விட்டதாகவும் தெரியவருகிறது. பி.டி.ஐ வெளியிட்டிருக்கும் செய்தியின்படி மத்திய புலனாய்வுப் பணியக அதிகாரிகள் இரண்டு சந்தேக நபர்களை மடக்கிப் பிடிக்க முற்பட்டபோது அவர்கள் அறையொன்றினுள் பூட்டிக் கொண்டு சயனைட் நஞ்சை அருந்தியதாகவும், இவர்கள் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்றும் அறியப்படுகிறது.

# மரண அறிவித்தல்கள்

## வீரவேங்கை யசோ
## (லோகேஸ்வரன் சுதாகரன்)

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தைச் சேர்ந்த வீரவேங்கை யசோ (லோகேஸ்வரன் சுதாகரன்) ஆனையிறவு நேரடி மோதலில் (16-07-91) செவ்வாய்க்கிழமை வீரமரணமடைந்தார். இவர் லோகேஸ்வரன் - பாலாம்பிகையின் அன்பு மகனும், தயாளினி, சுனேந்திரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுகுமாரின் மைத்துனரும், நிரோஷனாவின் மாமனுமாவார்.

இந்த அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

242, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம் [R/1 14]

- குடும்பத்தினர்

## வீரவேங்கை றமணி
## (சின்னத்துரை இரமணன்)

அல்வாயைப் பிறப்பிடமாகவும், ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மு. சின்னத்துரை குணரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் சின்னத்துரை இரமணன் ஆனையிறவு மோதலில் (21-07-91) அன்று வீரமரணமடைந்து விட்டார். இவர் மணிவண்ணன் கௌரிமலர், புஸ்பமலர், வானதி, ரேகா, லவன் ஆகியோரின் சகோதரனாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

282/43, செபஸ்தியார் கோயில் வீதி,
ஒட்டுமடம்.

தகவல்:
சி. பேரம்பலம்

[R/1613]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கோயமபுத்தூரில் மேலும் மூவர் கைது

(சென்னை)

கோயம்புத்தூரில் சட்ட விரோத ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மேலும் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் ஆவாரம் பாளையத்தில் கைப்பற்றப்பட்ட கைஎறிகுண்டுகளை இந்த மூன்று பேரும் புலிகளுக்குத் தயாரித்துக் கொடுத்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களையும் சேர்த்து சட்ட விரோத ஆயுதத் தயாரிப்பு தொடர்பாக இதுவரை எட்டுப்பேர் கைதாகியுள்ளனர்.

# தொண்டர் ஆசிரியர்கள் சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

காயமடைந்த போராளிகளைப் பராமரித்தல், இரத்த தானம் செய்தல், உலர் உணவு சேகரித்தல், வைத்திய சாலையைத் துப்புரவு செய்தல் போன்ற பணிகளில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் ஈடுபடுவதற்கமைவாக நேர அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் நேற்றைய கூட்டத்திற்கு சமுகமளிக்காதவர்கள் உடனடியாகத் தம்மைச் சந்திக்குமாறு தொண்டர் ஆசிரியர் சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

# இந்திய - நேபாள அதிகாரிகளின் கூட்டம்

(டில்லி)

இந்திய-நேபாள உயர்மட்ட அதிகாரிகளின் முதலாவது கூட்டம் இன்று காலை நேபாளத் தலைநகர் காட்மண்டுவில் இடம்பெறவுள்ளது. இரு நாடுகளுக்குமிடையேயான நீண்ட காலப் பொருளாதார ஒத்துழைப்பிற்கான விரிவான கட்டமைப்பு ஒன்றை இந்தக் கூட்டம் தயாரிக்கவுள்ளது.

இந்தியாவின் அமைச்சரவை செயலாளர் நரேஷ் சந்திரா தலைமையில் நான்கு உறுப்பினர்களைக் கொண்ட உயர் மட்டக் குழு நேற்று மாலை காட்மண்டுவிற்குச் சென்றடையும் என எதிர்பார்க்கப்பட்டது நேபாள பிரதிநிதி குழுவிற்குத் தலைமையேற்கும் நாட்டின் தலைமைச் செயலாளர் தாமோதர் கௌதம் உடன் அந்நாட்டின் வெளியுறவு, வர்த்தக நிதிச்செயலர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## வடக்கே

போர்வையில் வேறு பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக உணவுக்குப் பதிலாக பொலித்தீன் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இதற்காக சில அதிகாரிகள் அனுமதிப்பத்திரங்களையும் வழங்கியிருக்கின்றனர்.

இவ்வாறான பல லட்சக் கணக்கான ரூபா வரையில் மோசடிகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் குறைந்த பட்சம் ஒரு லட்சம் ரூபா வரையில் லஞ்சம் பெற்றிருக்கின்றனர்.

இவ்வாறான மோசடிகள் பற்றி எந்த அரச அதிகாரிகளோ அல்லதுஊழியர்களோ எனக்கு அறிவிக்கவில்லை என்றும் அப்பாவி குடிமகன் ஒருவரே தமக்கு இதுபற்றிக் கடிதம் எழுதியதாகவும் தெரிவித்தார்.

## சிறிலங்காவுடன்

வையிட்ட பின்னர் மண்டபத்தில்செய்தியாளரிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிக்கும் உரிமையை தமது மீனவர்கள் பெறுவது பற்றியும் இலங்கையோடு விவாதிக்கப் படுமெனவும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இலங்கைப் போராளிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காக கடற்படை பலப்படுத்தப்படுமெனவும், தமிழ்நாட்டில் கரையோர ரோந்துப்பணியில் கடற்படையும் விமானப்படையும் ஈடுபடுத்தப்படுவமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

### சர்வோதய அகதிகள் நிவாரணம்

# பனை அபிவிருத்திச்சபைக்கு 45,000 ரூபாவிற்கு விற்பனை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சர்வோதயத்துக்குச் சில மாதங்களுக்கு முன் அகதிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் பனை அபிவிருத்திச் சபையின் பயிற்சி நிலையங்களின் தேவைக்கு ரூ 45,000ற்கு விற்கப்பட்டுள்ளது. கொடுப்பனவில் சுமார் அரைவாசிப் பணத்தை, ரூபா 21,255க்கு காசோலையாக பனை அபிவிருத்திச் சபை சர்வோதயத்துக்கு வழங்கியுள்ளது. இதே வேளை, வடமராட்சி சர்வோதய புனர்நிர்மாண வேலைக்கு வழங்கப்பட்ட 40 பக்கற் சிமெந்தும் உரிய தேவைக்குப் பயன்படுத்தப்படவில்லை. அதுவும் விற்பனையாகி விட்டது.

# மன்னார் பயணிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இருந்து மன்னார் தீவினுள்சென்றுவர விரும்பும் பயணிகள் அனுமதி இல்லாமல் பயணம் செய்ய முடியாது. அரச ஊழியர் உட்பட அனைத்துப் பிரயாணிகளும் தமது சொந்தப் பகுதிக் கிராமசேவையாளரிடமிருந்து அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேச அரசியல் பொறுப்பாளரிடமிருந்து சிபார்சுக் கடிதம் பெற்றுக்கொண்டால் மாத்திரமே விடத்தல்தீவு செயலகத்தில் அனுமதி வழங்கப்படும்.

# சமுகம் தரவும்

போராளிகளை பராமரிப்பதற்கு பெயர் பதிந்த மற்றும் புதிதாக பெயர் பதிய விரும்பும் யாழ். இந்துவின் 11ஆம் ஆண்டு புதிய 12-ம் ஆண்டு, 12-ம் ஆண்டு மாணவர்களை இன்று காலை 10 மணிக்கு (4-8-91) தவறாதுகல்லூரிக்கு சமுகமளிக்குமாறு யாழ். இந்துவின் அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## வீரமரணம்

இருந்து நேற்று முன் தினம் வெளியேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்றமோதலில் 2ஆவது லெப்டினன்ட் ஜெயந்தன் (விநாயகமூர்த்தி விஜயகுமார் -கடற்கரை, திருக்கோவில்) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## 25 படை

டித் தாக்குதல் ஒன்றை நடத்தினர் கள்ளிச்சை இராணுவ முகாமிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் வைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் பத்தொன்பதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதில் இரு அதிகாரிகளும் அடங்குவர். பலர் படுகாயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து மிகுதியானோர் காயமடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டு முகாமுக்கு ஓடிவிட்டனர். இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரமரணமடைந்தார். பலரகநவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன,

இதேவேளை கள்ளிச்சையில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் தாக்குதலுக்குள்ளானதைத் தொடர்ந்து அவர்களுக்கு உதவியாக வெலிகந்தை முகாமில் இருந்து இராணுவத்தினர் வாகனம் சகிதம் வெளியேறினர், இவர்களைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

இத்தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்கள் வந்த ஒரு பிக்கப், ஒரு ஜீப், ஒரு 'கன்டர்' வான் என்பன புலிகளால் முற்றாகத் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம் இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் தூக்கிக்கொண்டு முகாமிற்கு ஓடிவிட்டது இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை

# அசோக்கிற்கு மக்கள் அஞ்சலி

நேற்றுமுன்தினம்ஆனையிறவு ராணுவமுகாமில்நேரடிமோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை அசோக் (சங்கத்தான் வயல், இடைக்கச்சி) இவரின் புகழுடல் நேற்று பிற்பகல் தென்மராட்சி அரசியல் பிரிவு செயலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்பு அங்கு வி.பு.ம. முன்னணியின் பிரமுகர்களின் அஞ்சலிஉரையுடன் முடிவுற்று இராணுவ மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தீயுடன் சங்கமமாகியது. இந்த அஞ்சலிக் கூட்டத்திற்கும், ஊர்வலத்திற்கும் மக்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர். (86)

# ஒரு சிப்பாய் பலாலியில் பலி

பலாலி இராணுவ முகாமுக்கு சமீபமாக நிற்கும் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட சினைப்பர்தாக்குலில்இராணுவத்தரப்பில் சிப்பாய்ஒருவர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# தற்கொலை

மா மரத்தில் கயிற்றை போட்டு இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை தற்கொலை செய்து கொண்டார். மேற்படி இளைஞர் கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த நா. குணரெத்தினம் (வயது 28) ஆவர். இவர் சென்ற வாரம் அரியாலை அருளம்பலம் வீதியில் உள்ள உறவினர்களின் இல்லத்துக்கு வந்து நேற்றுக்காலை தற்கொலை செய்து கொண்டார். (43)

## தமிழர்

தாகவும், சமாதான முயற்சிகளுக்கு தமது அரசாங்கத்தின் ஆதரவு உண்டென்றும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரிசித்தேவையில்

யாழ். மாவட்டத்தின் ஒரு வருடத்திற்கான அரிசித் தேவையுடன் கொழும்பு அரசாங்கத்தின் வழங்கலை ஒப்பிடும்போது பற்றாக்குறை அரிசியே யாழ். மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எமது தேவையில் 2.5 விகிதத்தையே அரசாங்கம் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ளது.

## விடுதலைக்காக

இயக்கத்தில் இணைந்துபயிற்சி பெற்று போரிட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் ஒப்படைத்தனர்.

## கள்ளிச்சையில்

| | |
|---|---|
| ரி. 81 ரகதுப்பாக்கிகள் | 07 |
| அதற்குரிய மகசீன் | 28 |
| பிறவுனிங் பிஸ்ரல் | 01 |
| அதற்குரிய மகசீன் | 02 |
| லிங்குடன் ரவைகள் 756 லிங் | 94 |
| ஐ எம் ரவைகள் | 1277 |
| 203 ரக ஷெல்கள் | 16 |
| ஜே. ஆர். கைக்குண்டு | 03 |
| 60 எம். எம். மோட்டார் ஷெல் | 10 |
| 60 எம். எம். மோட்டார் கோப்ளைக் | 01 |
| தொலைத் தொடர்பு சாதனம் | 01 |